மாசிலா ஏசு !

ஏசுபிரான் பாடல்கள்

81

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

மாசிலா ஏசு

ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

நூல் விவரம்

- நூற்பெயர் :
  மாசிலா ஏசு
- ஆசிரியர் :
  கலைமாமணி
  டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
- உரிமை :
  எஸ். அம்சவள்ளி
  (W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)
- அச்சிட்டோர் :
  பிராசஸ் இந்தியா
  294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
  இராயப்பேட்டை, சென்னை - 14.
- For Sales &
  Enquiries Contact : **S. AMSAVALLI**
  14, Amirtham Avenue, Bharani Street,
  Velacherry, Chennai - 600 042.
  Mobile : 9380297675, 9566042884
  email : ussankarram@gmail.com
  ussankarram@yahoo.com
- பதிப்பு : 2011
- பக்கம் : 72
- விலை : **45/-**
- நூலாக்கம் :
  டெலிபாய்ன்ட்
  16, சின்னப்ப தெரு,
  திருவல்லிக்கேணி,
  சென்னை - 5.
  Ph : 2848 3750

- காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு : நெய்தல் பதிப்பகம்
எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in

சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

– வாலி –

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது - நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

* * *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

* * *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;

கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
லகத்தார்
ட்செவிக்குள் போனது!

* *

வேங்கடவன்;
வேலவன்;
வேழமுகன்;
வாயு மகன்;
இன்னும்
இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;
விசிறி சாமியார்;

என
எந்த -
இறையும்;
இறையடியாரும் மிச்சமின்றி.....
இவனது -
பாடுபொருள் ஆயினர்; இவன்
பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

* * *

கண்ணதாசன் போல் - இந்தக்
கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து
பெருமாளிடம் வந்தவன்;
தான்பெற்ற இன்பம் - இந்தத்
தரணிபெற வேண்டி -

ஆன்ம
அனுபூதியை -
வையம் உய்யுமாறு
வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

* * *

சுருங்கச்
சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

* * *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

* * *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -

அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....

போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

* * *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

* * *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

* * *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....

அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ண தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

* * *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;

இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

* * *

—வாலி—

கலைமாமணி
டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
ஒரு சிறு குறிப்பு



கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமுதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்ததொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ..வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ..பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
உலகம் **பே**சும் **ச**ண்முகம் - உ..பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

பொருளடக்கம்

மாசிலா ஏசு 15

மாசிலா ஏசு பாடல்கள்

1. இறந்தாலும் உயிருள்ள தெய்வம்

இறந்தாலும் உயிருள்ள தெய்வம் - எங்கள்
ஏசு மொழிந்ததைச் செய்வோம்.

(இறந்தாலும்)

மறந்தும் நாம் பாவங்கள் செய்யோம் - செய்து
வருந்து கின்றாரை மன்னித்து உய்வோம்

(இறந்தாலும்)

கஞ்சத் தனத்தை வெறுப்போம் - நம்
கர்த்தரின் ஆணையை மதிப்போம்
பஞ்சம், பசிக்கொடுமை தவிர்ப்போம் - நம்
பகைவனுக்கும் இரக்கம் படைப்போம்

(இறந்தாலும்)

நல்ல வழியினில் நடந்தால் - இங்கு
செல்வருக்கும் மோட்சம் உண்டு
பொல்லாத வேசிக்கும் வாழ்வு - இந்தப்
புனித நாமத்தைச் சொல்வோம்

(இறந்தாலு

2. தாலாட்டு

ரோஜாப் பூவே ராஜாவே வா வா
த்யானக் கனியே செண்பகமே வா வா

தாலாட்டுப் பாட்டொன்று பாடட்டுமா
பாராட்டிச் சீராட்டிப் பார்க்கட்டுமா
பூப்போலப் பொன்னூஞ்சல் ஆட்டட்டுமா
புதிதாகக் கதையொன்று சொல்லட்டுமா

நேசனை நெஞ்சில் அணைக்கட்டுமா
பாசத்தைக் கொட்டி அளக்கட்டுமா
ஏசுவே அள்ளி எடுக்கட்டுமா
ஆசையாய் முத்தம் கொடுக்கட்டுமா

நீதானே எங்கள் குலக்கொழுந்து
தேனாகத் தித்திக்கும் சுவை விருந்து
வாராயோ மடிமீது கண்ணுறங்கு
வற்றாத செல்வமே கண்ணுறங்கு

ஆணிப்பொன் முத்தாரம் மாணிக்க மணியாரம்
காணக் கண் போதாது கண்ணுறங்கு (கண்ணே)

கண்ணுக்குள் என்ன சித்திரமோ
எண்ணத்தில் என்ன விசித்திரமோ
வண்ணத்துப் பறவை இமை மூடு
வானத்துத் தேவாஎன் சொல் கேளு

போதும் உன் தீரா விளையாட்டு
வா எந்தன் தோளில் தலை சாய்த்து
ஓய்வாகச் சற்றே கண்ணுறங்கு
ஒய்யாரச் சிட்டே கண்ணுறங்கு

நீ வந்த காரணம் யாவும் நிறைவேறும்
பாரெல்லாம் போற்றிடும் கண்ணுறங்கு (கண்ணே)

3. ஏசுபிரான் தாலாட்டு

ஜீவனே.... சீலனே
ராஜ ராஜன் நீயே
தாயவள் தோளிலே
தாங்கித் தாலாட்டவே தூங்குவாய்
வானமும் பூமியும்
வாழ்த்துதே உன்னைப் போற்றுதே (ஜீவனே)

திருத்தூதர் சேதி சொன்னார்
மரியம்மா மனம் மகிழ்ந்தாள்
ரகசியத்தைக் காத்து வந்தாள்
கற்பரசி கர்ப்பத்தில் நீ

தேவன் பூலோக வருகை
காலம் வேண்டியநல் தவமே

எங்கும் புதிய மணம்
தங்க ஒளிபரவும்
சந்தோஷ சாம்ராஜ்யம் தந்தவனே
எங்கள் எதிர்காலம்
இன்ப சுகபோகம்
பொங்க மனம் வைத்து வந்தவனே (ஜீவனே)

தொழுவத்திலே பிறந்தாலும்
உலகமெல்லாம் ஆளவந்தாய்
எளியோரின் கடன் தீர்க்க
ஏசு கிறிஸ்து நீ பிறந்தாய்

தாய்க்கு நீதந்த கிருபை
தரணிக் கேதந்த சலுகை

பாவம் தீர்ந்திடுது
ஞானம் சேர்ந்திடுது
பரவசம் ஆனந்த பரவசமே
பேய்கள் ஓடிடுது
நோய்கள் விலகிடுது
தாயும் சேயும் செய்யும் அற்புதமே (ஜீவனே)

4. கிறிஸ்து நாதருக்கு நன்றி

பாடுவோம் ஏசுவின் திருநாமம்
ஆனந்த மானது அதுதான்
நாவினில் தேவனின் மொழியே - மிக
நலம் தரும் வளம் தரும் கீதம் (பாடுவோம்)

ராஜன் பிறந்தது நமக்கே
ஆவி விடுத்ததும் நமக்கே
ஜீவ பலியாய் நேச மணியாய்
வாழ்வு கொடுத்தவன் அவனல்லவா (பாடுவோம்)

ஆதி தந்தையே சுதனே
தூய ஆவியே வருக
பூஜை நேரம் புனித அப்பம்
ஏற்று எங்களைக் காத்திடுவீர் (பாடுவோம்)

ஆயர் குழுவொடு செல்வோம்
காணிக் கைப்பொருள் தருவோம்
கொடைகள் பெறவே தடைகள் இல்லை
நன்றி சொல்வோம் நாயகனே (பாடுவோம்)

5. சந்தோஷ சாம்ராஜ்யம்

குழந்தை ஏசுவைக் கொண்டாடுங்கள்
பண்பாடுங்கள்
ஒன்று சேருங்கள்

தேவ மைந்தன் பிறந்தான் - / புது
தேவ மைந்தன் பிறந்தான்

சரித்திரம் மலருது
சத்தியம் நிலைக்குது
காவல் அவன்தான் - நம்
காவல் அவன் தான்! (குழந்தை ஏசுவை)

கடவுளின் சாம்ராஜ்யம் கண்ணுக்குத் தெரியுது
மடமைகள் விலகுது - புது யுகம் வருகுது
கர்த்தரின் நல்வருகை மண்ணுக்கு புகழ் அது
இருள் அது கலையுது
ஒளிக் கதிர் பரவுது
தேவ மைந்தன் பிறந்தான் - நம்
காவல் அவன் தான் (குழந்தை ஏசுவை)

புயலுக்கு நடுவிலும் புன்னகை செய்பவன்
பகையையும் மன்னித்து பாரத்தை ஏற்பவன்
துயரெலாம் அகலுது
பயம் இனி எதற்கது?

தேவ மைந்தன் பிறந்தான் - நம்
காவல் அவன் தான் (குழந்தை ஏசுவை)

ஆத்மாவின் சங்கீதம் அவனுக்குத் தாலாட்டு
அன்போடு ஜபம் செய்க அதுவே தான் பாராட்டு
மலைகளும் தூளாகும்
கடலதும் வழிவிடும்
தேவ மைந்தன் பிறந்தான் - நம்
காவல் அவன் தான் (குழந்தை ஏசுவை)



6. மனித குலத்தின் விடிவெள்ளி

அல்லே லூயா...... அல்லே லூயா........!

ஆண்டவன் அளித்த அடையாளம் - நம்
ஏசு கிறிஸ்துவின் அருள் தோற்றம்
அவர்தான் நீதி அவர்தான் பாதை
அவரே ஜீவன் அறிவாய் நீ.....

அல்லே லூயா...... அல்லே லூயா........!

இருளில் ஒளியை வழங்குபவர்
துணையாய் தொடர்ந்து வந்திடுவார்
புயலின் நடுவே நங்கூரம்
கரையில் சேர்ப்பது அவர்பாரம்

அல்லே லூயா...... அல்லே லூயா........!

பேய் பிசாசு நெருங்காது
பிணிகள் வறுமை அணுகாது
இதயத்தை அவரிடம் கொடுத்துவிட்டால்
எந்தப் பாவமும் நில்லாது

அல்லே லூயா...... அல்லே லூயா........!

பகைவன் மனமும் நெகிழ்ந்திடுமே
பட்ட மரமும் துளிர்த்திடுமே
மரணமும் அவரிடம் சரணடையும்
மனித குலத்தின் விடிவெள்ளி

அல்லே லூயா...... அல்லே லூயா........!

பிறந்தார் நம்மைக் காப்பதற்கே
இருந்தார் நம்மைக் காப்பதற்கே
இறந்தார் நம்மைக் காப்பதற்கே
இருக்கின்றார் நமைக் காப்பதற்கே

அல்லே லூயா...... அல்லே லூயா........!

7. ஜீவிய பாக்கியம்

நம் ஜீவிய பாக்கியம்
ஏசு பிறந்தார்
வாருங்கள் வாழ்த்துங்களே
சின்ன
மாட்டுத் தொழுவத்தில் மன்னர் பிறந்தார்
பாட்டுக்கள் பாடுங்களே - வந்து
பாலனைப் பாருங்களே - குண
சீலனைப் பாருங்களே - குழந்தை
ஏசுவைப் பாடுங்களே (நம் ஜீவிய பாக்கியம்)

காரிருள் நேரத்தில் வானத்தில் தாரகை
கண்கள் சிமிட்டுதே - பல
தீர்க்க தரிசிகள் தேடி வருகிறார்
தோத்திரம் சொல்லுங்களே - தோளில்
தூக்கியே கொஞ்சுங்களே - ஆராரோ
தாலாட்டுப் பாடுங்களே - குழந்தை
ஏசுவைப் பாடுங்களே (நம் ஜீவிய பாக்கியம்)

மேய்ப்பவர் காப்பவர் மீட்பவர் தோன்றினார்
பூக்களைத் தூவுங்களே - இனி
போர்க்குணம் போனது புதுமை தவழ்ந்தது
ஆர்ப்பரித் தாடுங்களே - அன்பனை
பார்த்திடக் கூடுங்களே - கை
கோர்த்துக் கூத்தாடுங்களே - குழந்தை
ஏசுவைப் பாடுங்களே (நம் ஜீவிய பாக்கியம்)

மோஹனப் புன்னகை ஆயிரம் பூமழை
காணவே வாருங்களே - நம்
வாட்டத்தைப் போக்கிடும் வள்ளலை செல்வத்தை
போற்றுக போற்றுங்களே - வந்து
ஏற்றுக தீபங்களே - எங்கும்
ஏற்றுக தீபங்களே - குழந்தை
ஏசுவைப் பாடுங்களே (நம் ஜீவிய பாக்கியம்)



8. மேல் நோக்கியே நடத்துக

மேல் நோக்கியே நடத்தும் - எனை
மேல் நோக்கியே நடத்தும்
யேசு பெருமானே...... சீமானே...........
இருளெல்லாம் நீங்கி ஒளிவரும் வரைக்கும்
(மேல் நோக்கியே)

பாதை அறியாமல் தடுமாறிப் போகிறேன்
பள்ளத் தாக்கில் சிக்கி உள்ளம் குமைகிறேன்
மலை உச்சி காணாமல் மயக்கத்தில் ஆழ்கிறேன்
இளங்காற்று வீசட்டும் மழைமேகம் விலகட்டும்
(மேல் நோக்கியே)

சக்திக்கு மீறி என்னை விரட்டி விடாதே
சமவெளியில் தூங்க விட்டு விடாதே
வருத்தம் தெரிந்தவன் நீ ஒருத்தன் தானே
வாழ்விலும் தாழ்விலும் உனை மறவேனே
(மேல் நோக்கியே)

செங்குத்துப் பாறை சீறிடும் ஆறுகள்
கர்த்தர் என்னைக் காப்பாற்று கின்றார்
நம்பிக்கை யோடு நடந்து வருகிறேன்
நாதன் முன்செல்ல வீண்பயம் எனக்கேன்
(மேல் நோக்கியே)

9. ஏசு வாழ்கிறார்

ஏசு வாழ்கிறார் நெஞ்சினில் எப்போதும்
ஏசு வருகிறார் எதிரினில் எந்நாளும்
எனைப் பார்க்கிறார் ஏனதில் சந்தேகம்
தினம் காக்கிறார் என்றுமே சந்தோஷம் (ஏசு வாழ்கிறார்)

ஏது பேசினும் ஏசுவின் சொல்லாகும்
எங்கு செல்லினும் வெற்றியே உண்டாகும்
தீமை ஓடிடும் நோய்களும் நில்லாது
தேவன் இருக்கிறார் பொய்மைகள் செல்லாது (ஏசு வாழ்கிறார்)

தோள் சுமந்தது சிலுவைதான் என்றாலும்
பாரம் அதனினால் பாவங்கள் சென்றோடும்
வாழ்விலே அவர் காலடி பின்னாலே
வருபவர் துயர் நீங்கிடும் தன்னாலே (ஏசு வாழ்கிறார்)

வானிலே அவர் முழுநிலா உல்லாசம்
பூமியில் அவர் பசுமையின் ஊர்க்கோலம்
கானிலும் அவர் கனிகளின் சிங்காரம்
கவிதையில் அவர் சொற்களின் சங்கீதம் (ஏசு வாழ்கிறார்)

10. கிறிஸ்து பாடல்

இதுவரை ஒருவர் பிறந்த தில்லை
ஏசுவைப் போல் இங்கு மாசற்ற (இதுவரை)

சிலுவையில் தன்மேல் ஆணி வைத்து
சிகையினை முள்ளால் மூடி வைத்து
அணு அணுவாக வதைத்த பின்னும்
அன்பின் வடிவாய் நின்றிருக்க (இது வரை)

நல்லவர்க்குக் கல்லடிகள்
நஞ்சு தூக்கு குண்டு வைப்பார்
எல்லா வற்றிலும் கொடுமையடா
ஏசு பெற்றது யார் பெற்றார்? (இது வரை)

அருளின் உருவம் அவர் உருவம்
ஆண்டவன் தந்த சேய் உருவம்
இருளை நீக்கி ஒளிதரும் ஓர்
இன்ப கருணைத் திருஉருவம் (இது வரை)

11. இயேசு கிறிஸ்து - 1

அல்லும் பகலும் என்னைக் காக்கும்
அன்பே அழைக்கின்றேன்
ஐயா உந்தன் கருணையி னால்தான்
என்றும் பிழைக்கின்றேன் - இந்த
ஏழை பிழைக்கின்றேன் (அல்லும்)

சொல்லும் செயலும் ஒன்றாய் ஆக
நின்னைத் துதிக்கின்றேன் - உன்
தூய வாழ்வை நாளும் எண்ணித்
தொடர்ந்து களிக்கின்றேன் (அல்லும்)

எல்லை என்பது எதற்கும் உண்டு
ஏசு பிரானே நீ
எல்லை கடந்தும் இரக்கம் கொண்டு
எம்மை மன்னித்தாய்
கல்லும் கனியாய் மாறச் செய்யும்
கலையைக் கற்பித்தாய்
முள்ளும் மலரென முடியில் அணிந்தே
முடியாப் புகழ்பெற்றாய் - பிறர்போல்
மடியா நிலைபெற்றாய் (அல்லும்)

12. திருமகன் தரிசனம்

திருமகன் தரிசனம் இனிமையானதே
தேவனின் காலடி புனிதமானதே
நல்லாவி அருளால் நலம் சேர்ந்ததே (திருமகன்)

பிணிகள் போக்கினார்
எனை நோக்கினார்
மறை வாக்கினார்
குறைகள் நீக்கினார்
இளைப்பாறு எனவே என்னைத் தழுவினார்
சுமைகளை இறக்கினார்
சுகமாக்கினார் (திருமகன்)

நொண்டி ஆடுநான்
எனைத் தூக்கினார்
முடம் நீக்கினார்
பாலை ஊட்டினார்

இளைப்பாறு எனவே என்னைத் தேற்றினார்
அடைக்கலம் அவரிடம்
புது வாழ்விதே

கர்த்தரின் காலடி புனிதமானதே
நித்தமும் அவர் ஜபம் இனிமையானதே

13. பரமபிதாவின் வருகை

மனிதர்களின் பாவம் தீர்க்க
பரமபிதா அவதரித்தார்
மனிதர்களின் பாவத்தாலே
சிலுவை தனில் அவர் மரித்தார்
பாய்ந்து வந்த ரத்தமதால்
தீமையைப் போக்கினரே
மாய்ந்த பின்னும் யேசுமகான்
மீண்டும் வந்தனரே (மனிதர்களின்)

அறியாமல் நான் செய்த தவறுகளை பொறுத்தருளும்
ஆண்டவரே
தன்னுயிரைத் தந்தவரே மன்னுயிரைக் காத்தவரே
நம்முடைய கர்த்தரென நாளெல்லாம் நாம் துதிப்போம்
(மனிதர்களின்)

மேய்பவராய் நாமிருக்க மேய்ப்பவராய் அவரிருப்பார்
சேய் நலனைக் காத்திருக்கும் தாயாகத் துணையிருப்பார்
பாவமென்னும் இடியோசை பறந்திடவே அவர்வருவார்
(மனிதர்களின்)

14. ஈடிலாதவர்

உன்னைப் போல ஒருவர் - இந்த
உலகில் பிறக்க வில்லை
உண்மைக் காக தனது - இனிய
உயிரைத் துறக்க வில்லை
என்னென்னவோ கொடுமைகள்
இழைத்தாலும் பொறுத்தாய்
இரக்கத்தைப் பொழிந்தே நீ
எப்போதும் சிரித்தாய்
புன்னகையைச் சிந்தும் உன் பூமுகமே - என்றும்
பொறுமைதான் நீ ஏந்தும் கேடயமே (உன்னைப் போல)

தன்னைத் தானே தந்துவிட்டாய் - இந்தத்
தரணி வாழ தயை புரிந்தாய்
கண்ணின் மணியே ஏசுநாதா
கருணை வடிவம் நீ தானே
பாலை வனத்தில் சோலை நீயே
பாலை ஊட்டும் அன்புத் தாயே
தேனாகச் சுவைக்கின்ற சித்திரமே - உனை
எந்நாளும் மறக்காது சரித்திரமே (உன்னைப் போல)

புதிய போதனை உரைத்தாயே - எனைத்
தொடர்ந்து வாஎன அழைத்தாயே
மனித னாகப் பிறந்தாயே - ஒரு
தேவ னாக உயர்ந்தாயே
எதையும் தாங்கும் இதயம் காட்டும்
புனித னேஉன் பொன்னடி போற்றி
விதைகளை விதைத்தே நீ சென்றாயே - நல்ல
அறுவடை காண்கின்றோம் ஐயாவே (உன்னைப் போல)

15. விண்ணின் ஒளி

விண்ணின் ஒளியே
கண்ணின் மணியே
பொன்தூவும் புது மழையே
வற்றாத நதியே
வாடாத மலரே
முத்தான முத்தமிழே
எப்போதும் என் துணையே (விண்ணின் ஒளியே)

தன்னந் தனியே தவிக்கையிலே
மின்னல் கொடிபோல் வருவாயே
கன்னங் கரிய காரிருளில்
அன்னையைப் போல் அணைப்பாயே
என் நாவில் நீயே சங்கீதம்
என் ஸ்வாஸம் உன்னில் விஸ்வாஸம்
ஏ சு நா தா ஜீவிய பாக்கியமே (விண்ணின் ஒளியே)

எந்தன் கதவைத் தட்டிடுங்கள்
அன்புக் கரத்தால் திறந்திடுவேன்
உள்ளம் மலர்ந்தே கேளுங்கள்
என்ன வேண்டும் கொடுத்திடுவேன்
என்றாயே உன்போல் யார் வருவார்
எல்லாமே உன் போல் யார் தருவார்
ஏ சு நா தா ஜீவிய பாக்கியமே (விண்ணின் ஒளியே)

16. புலரும் காலை

புலரும் காலையில் பொன்னொளியும் தெரியுமே
மழையின் சாரலில் வானவில்லும் வளையுமே
கர்த்தரின் சோலைகள் பூக்களைச் சொரியுமே
இனி இங்கு எந்நாளும் நம்வாழ்வு ஆனந்த ராகம்
(புலரும் காலையில்)

தன்னையே நீயும் தந்திடு வாயே
அன்னையாய் அவரை ஏற்றிடு வாயே
எத்தனை சோதனை சூறா வளியிலும்
கர்த்தரை நம்பி சரணடைவாயே
கர்த்தரின் சோலைகள் பூக்களைச் சொரியுமே
இனி இங்கு எந்நாளும் நம்வாழ்வு ஆனந்த ராகம்
(புலரும் காலையில்)

பொறுத்துக் கொள்பவர் பாக்கிய வான்கள்
போற்றித் துதிப்போர் புனித சீமான்கள்
அவரின் சிலுவை நிழலிலே நிற்போர்
அத்தனை பேரும் கஸ்தூரி மான்கள்
கர்த்தரின் சோலைகள் பூக்களைச் சொரியுமே
இனி இங்கு எந்நாளும் நம்வாழ்வு ஆனந்த ராகம்
(புலரும் காலையில்)

17. நீயே துணை

உன் போலே சகாயம் செய்வார்
ஒருவரும் இல்லையே
எந்நாளும் என் துணை நீயே
அன்பின் எல்லையே
நீதான் என் தேவ கானம்
நிலவுடன் நீலவானம் (உன் போலே)

என்பாரம் எங்கே ஓயும்
ஏசுவின் தோள்க ளன்றோ
கொட்டும் மழையில் குடையாய் வருவது
கிறிஸ்துவின் கைகளன்றோ
கடவுள் ஆட்சி ஒன்றே
என் ஜீவ சாம் ராஜ்யம்
புயலின் நடுவே உன் மீட்பு
வழி காட்டுமே (உன் போலே)

உன் பார்வை மலர்ந்த போது
முள்ளும் ஒரு பூவாகும்
மண்ணெல்லாம் பொன்னாய் மாறும்
கல்லும் ஒரு கனியாகும்
ஏசுவின் நேசம் ஒன்றே
வீசிடும் தென்றல் ஆகும்
கல்வாரி மலையில் தோன்றும்
சத்ய ஜோதியே (உன் போலே)

18. ஈடிலாத் த்யாகம்

ஏசுவின் தியாகமே - ஓர்
ஈடிலா தியாகம்
ஏசுவின் நேசந்தானே
மாசிலா நேசம் (ஏசுவின்)

சூழும் பாவம் தோளிலே தாகம் சோகம் மீறினும்
சிலுவை யாக தாங்கினார் தரணி வாழ ஏங்கினார்
ஆவி சோர்ந்து மாயும்போதும்
தேவ கிருபை வேண்டினார்

அறியாத பிழைகள் மன்னித்திடு
இறைவா என்றார் அன்பின் உரு (ஏசுவின்)

ஆணி யாலே தாக்கினார் சாட்டையாலே வாட்டினும்
முள்ளின் க்ரீடம் சூட்டினார் சாந்தம் பொறுமை காட்டினார்
கேலி பேசி காறி உமிழ்ந்தும்
யாவும் நெஞ்சில் தாங்கினார்

ஆறாக குருதி பாய்ந்தாலுமே
மாறாத கருணை வள்ளல் அவர் (ஏசுவின்)

19. மேய்ப்பர் வருகிறார்

மேய்ப்பர் வருகிறார்
மீட்க வருகிறார்

ஏசு கிறிஸ்து உயிர்த் தெழுந்தாரே
நன்னாளிதே பொன்னாளிதே
பண் பாடுவோம்
கொண்டாடுவோம் (மேய்ப்பர்)

அருளாய் ஒளியாய் அவர்தான் வந்தாரிதோ
புவியாளும் மகராஜன் நின்றாரிதோ
புலியும் மானும் சேர்ந்தே விளையாடுதே
குயிலோடு தேனீ இசை பாடுதே
போராடும் பேயும் ஓடோடுமே
பயமேன் ஜெயமே அல் லே லூ யா
பசுமை எங்கும் வளமை பொங்கும்
பொற்காலம் என்னை தேடி வந்ததே

நன்னாளிதே பொன்னாளிதே
பண்பாடுவோம்
கொண்டாடுவோம்
இறைவா எங்கள் தலைவா
உ னை நாடி நின்றோம்
குறைகள் தீருமே (மேய்ப்பர் வருகிறார்)

இருள் விலகும் பொழுதும் புலர்கின்றதே
இப்போது அவர் எந்தன் பக்கத்திலே
தனிமைத் துயரம் இனியும் எனக்கில் லையே
ஒரு போதும் பிரியனே மறவேனே நான்

பரலோக ராஜ்யம் தூரம் இல்லை
பயமேன் ஜெயமே அல்லே   லூயா
உயிரே ஜீவ சுடரே நிலவே
தீராத தாகம் தீர்ந்து போனதே

நன்னாளிதே
பொன்னாளிதே
பண்பாடுவோம்
கொண்டாடுவோம்
இறைவா எங்கள் தலைவா
உனை நாடி நின்றோம்
குறைகள் தீருமே (மேய்ப்பர் வருகிறார்)

20. பிள்ளைச் சிரிப்பு

சின்ன முகம் இயேசு சிரிக்கும் விதம்
புன்னை மலர் பூத்துக் குலுங்கும் நிதம்
அழைக்கின்றதே அந்த பிஞ்சுக் கரம்
அருள்கின்றதே நாம் கேட்ட வரம் (சின்ன முகம்)

வெள்ளி தோறும் மக்கள் கூட்டம்
வெள்ளம் போல பெருகிடும்
பிள்ளை தன்னை காணக் காண
உள்ளம் நெகிழ்ந்து உருகிடும்
கொள்ளை அழகு குழந்தை ஏசு
செல்ல மழலை பேசிடும்
கொழும்பு நகரின் அன்பு தெய்வம்
குறைகள் யாவும் தீர்த்திடும் (சின்ன முகம்)

ஆறு வீதி கூடும் நடுவில்
அவனின் கோயில் தோற்றமே
தேடி வந்து வணங்கும் போது
நாளும் நாளும் ஏற்றமே
கோடி கோடி செல்வம் வழங்கும்
தேவன் மேனி தங்கமே
பாலன் வாழும் ஆலயம் அதன்
பேரும் கூட தங்கமே (சின்ன முகம்)

21. வரலாறு

வெள்ளிக்கிழமை விடியற் காலை நேரம் - எங்கள்
விழிகள் மலரும் குழந்தை உன்னைத் தேடும்
ஆலய மணியின் ஓசை காற்றில் தவழும் - அந்த
அழைப்பு கேட்டு அன்பர் நெஞ்சம் குளிரும்
கொஞ்சி மகிழும்
(வெள்ளிக்கிழமை)

ஸ்பெயின் நாட்டு ராணி வளர்த்த செல்வம்
ஏழை மக்கள் பசியைப் போக்க வந்தாய்
பாதிரி இருவர் வேண்டுதல் கேட்டு கனிந்தாய்
மீண்டும் உந்தன் அழகு வடிவம் கொண்டாய்
அருள் தந்தாய்
(வெள்ளிக்கிழமை)

உந்தன் பெயரை சொன்னால் போதும் எதுவும்
நன்றே ஆகும் நலமே சேரும் அறிவோம்
என்ன வேண்டும் என்றாலும் அதைக் கொடுப்பாய்
எங்கள் துயரம் பிணிகள் பாவம் தடுப்பாய்
மெல்ல சிரிப்பாய்
(வெள்ளிக்கிழமை)

22. சமரசத் தோணி

நம்பிக்கை யோடு உன்னிடம் வருவோர்
வெறுங்கை யோடு திரும்புவ தில்லை
குழந்தை உன்னை கும்பிட்டுச் செல்வோர்
நலங்கள் பெறவே தவறுவ தில்லை
நீயே அன்பின் எல்லை - இனி
எங்களுக் கேது தொல்லை

இயேசு ராஜா வந்து பேசு ராஜா
வாசம் வீசும் எங்கள் நேச ரோஜா (நம்பிக்கை)

ஜாதி இல்லை பேதம் இல்லை சண்டை ஏதும் இங்கு இல்லை
நீதிகேட்டு ஓடி வருவார்
யாரும் உன்னைத் தேடி வந்து கோயிலுக்குள் கூடி நின்று
மண்டி யிட்டு உன்னைத் தொழுவார்
தேவை அது என்ன வென்று தெரிந்து கொண்டு செய்து வைத்து

வாழ்வு தரும் தேவ மகனே
காவலுக்கு நீ யிருக்க யார் துணையும் தேவை இல்லை
மா மரியின் செல்வ மகனே
இயேசு ராஜா வந்து பேசு ராஜா
வாசம் வீசும் எங்கள் நேர ரோஜா (நம்பிக்கை)

வானம் விட்டு பூமிவந்து கானம் பாடும் பூங்குயிலே
கண்மணியே எங்கள் உயிரே
வட்டவிழி மொட்டவிழ ரெட்டைவிரல் காட்டி எங்கள்
வாட்டமதைத் தீர்க்கும் நிலவே
தேனமுத பானம் தரும் திருக்கிண்ணம் ஏந்துகின்ற
பூங்கரமே புகல் இடமே
மாமகுடம் உச்சியிலே பாடுபடும் ஓர் சிலுவை
பாவம் எல்லாம் போக்கி விடுமே
இயேசு ராஜா வந்து பேசு ராஜா
வாசம் வீசும் எங்கள் நேச ரோஜா (நம்பிக்கை)

23. பிரார்த்தனை

அதிசயக் குழந்தை யேசுவே
எங்கள் மேல் தயவு வை
கிருபை செய் கருணைவை
ஏசுவே குழந்தை ஏசுவே (அதிசயக் குழந்தை)

அன்பான குழந்தை ஏசுவே
இங்குவா என்றே அழைக்கிறாய்
இருகரம் நீட்டி அழைக்கிறாய்
வாழ்த்துவேன் வாஎன அழைக்கிறாய் (அதிசயக் குழந்தை)

உன்னைப் போற்றி த்யானம் செய்ய உதவுவாய்
இந்த நேரம் இனிய நேரம் அல்லவா
நீதான் மீட்பன் தலைவன் ஆண்டவன்
அக்கரை கொண்டே அக்கரை சேர்க்கும் துணைவன் தூயவன்
(அதிசயக் குழந்தை)

குறைகள் களைவாய் வளங்கள் பொழியும் வள்ளலே
விண்ணப்பம் கேட்டே விரைந்து நீ எழுந்து வா
தூய ஆவியும் பரம பிதாவும் உன்னுடன்
என்றும் நீயே தெய்வம் அன்றோ குழந்தை ஏசுவே
(அதிசயக் குழந்தை)

ஜபங்கள் சொல்ல உதவுவாய்
இதுதான் நேரம் அல்லவா
எங்களின் இனிய மீட்பனே
அக்கரை சேர்த்துக் காக்கவா (அதிசயக் குழந்தை)

வளங்கள் பொழியும் வள்ளலே
வேண்டுதல் கேட்டே விரைந்து வா
தந்தையும் தூய ஆவியும்
என்றும் உன்னுடன் ஆசிதா (அதிசயக் குழந்தை)

24. எழிற்கோலம்

கண்ணான கண்மணியே
காந்தமே பொன் மழையே
விண் ஆண்டு நின்றவனே
மண் ஆள வந்தவனே
    குழந்தை ஏசுவே - (எங்கள்)
    குழந்தை ஏசுவே (கண்ணான)

தூதரின் சொல்கேட்டு
தூயமரி சுமந்திருக்க
வாழ்களன வாழ்த்துச் சொல்லி
வாழ்வளிக்க வந்தவனே
பாவங்கள் நீங்குவதற்கும்
பரலோகம் காண்பதற்கும்
காலத்தின் பரிசாக
கடவுள் தந்த கண்ணியனே
    குழந்தை ஏசுவே - (எங்கள்)
    குழந்தை ஏசுவே (கண்ணான)

பட்டு விழிப் பார்வை அது
    பட்டதுமே நோய் அகலும்
கொட்டும் மலர் புன்சிரிப்பு
    அற்புதங்கள் பல புரியும்
    நட்டநடு இரவினிலே
    நாடி வந்த முழு நிலவே
எட்டுத் திக்கும் உன் ராஜ்யம்
ஏசு உன் எழிற்கோலம்
    குழந்தை ஏசுவே - (எங்கள்)
    குழந்தை ஏசுவே (கண்ணான)

25. அல்லேலூயா

இப்படி ஓர் ஒளி
இதுவரை பிறக்கவில்லை
இப்படி ஓர் இசை
இதுவரை ஒலிக்கவில்லை
வானத்தில்.........
தேவதைகள்.......
கானமழை........
பொழிகிறது.........
நட்சத்ரம்..........
ஒவ்வொன்றும்........
நன்றி சொல்லி.........
மகிழ்கிறது..............

வந்து விட்டார் ஏசு
குழந்தை வடிவத்திலே
தந்துவிட்டார் தன்னை
இளகும் இதயத்திலே

குழந்தை ஏசுவைக் கொண்டாடுவோம்
நலந்தர வாஎன மன்றாடுவோம்
அல்லே லூயா! அல்லே லூயா! அல்லே லூயா! அல்லே லூயா!
(இப்படி ஓர் ஒளி)

காலைக் கதிரொளியில் பனி சூழும் புல்வெளியில்
ஆனந்த சுக ராகம் அது அன்பின் சங்கீதம்
இந்த அவனிக்கு சந்தோஷம்
வந்துவிட்டார் ஏசு குழந்தை வடிவத்திலே
தந்துவிட்டார் தன்னை இளகும் இதயத்திலே

குழந்தை ஏசுவை கொண்டாடுவோம
நலந்தர வாஎன மன்றாடுவோம்
அல்லே லூயா! அல்லே லூயா! அல்லே லூயா! அல்லே லூயா!
(இப்படி ஓர் ஒளி)

கல்லையும் கனியாக்கும் - பெரும்
கருணையும் மறுஉருவம்
முள்ளையும் மலராக்கும் - ஒரு
மோஹனத் திரு உருவம் - நம்
பாவம் பறந்தோடும்

வந்துவிட்டார் ஏசு
குழந்தை வடிவத்திலே
தந்துவிட்டார் தன்னை
இளகும் இதயத்திலே
குழந்தை ஏசுவைக் கொண்டாடுவோம்
நலந்தர வாஎன மன்றாடுவோம்
அல்லே லூயா! அல்லே லூயா! அல்லே லூயா! அல்லே லூயா!
(இப்படி ஓர் ஒளி)

26. நவநாள் ஜெபம்

ஆணிப்பொன் மண்டபத்தில்
அலங்கார பீடத்தினில்
அழகே உருவான
அற்புதக் குழந்தை ஒன்று
காணக்கண் போதாது
கண்டுவிட்டால் மாறாது
தேனாகத் தித்திக்கும்
சேய்புகழ் எத்திக்கும்
பிள்ளைக் கனி அமுதோ
பேசும் பொன் ஓவியமோ
குழந்தை ஏசு எங்கள் குழந்தை ஏசு

கோடி சூர்ய ஒளி கூடிக் குலவுதடி
பாலன் திரு முகத்தில் பால்நிலா தவழுதடி
என்னை நீ நேசித்தால் இருவரும் ஒன்றெனவே
இரட்டை விரல் காட்டுதடி அற்புதங்கள் நாட்டுதடி
செல்லப் பசுங்கிளியோ குழந்தை ஏசு
தென்பாண்டி முத்தொளியோ குழந்தை ஏசு
குழந்தை ஏசு எங்கள் குழந்தை ஏசு

நவநாள் ஜெபம் செய்தால் நலங்கள் கொழிக்குதடி
பலநாள் பாடெல்லாம் பனிபோல் கரையுதடி
திருநாள் கொண்டாடி தேவனின் புகழ்பாடி
வரும் நாள் வளமாக வரம்பெறும் நேரமடி
கொண்டாடும் இடத்தில் எங்கள் குழந்தை ஏசு
பண்பாடப் பலன் தருவான் குழந்தை ஏசு
குழந்தை ஏசு எங்கள் குழந்தை ஏசு

27. சொன்ன சொல் (வேண்டுதல்)

விருத்தம்

வானும் மண்ணும் ஒருநாள் மறையும்
என் வார்த்தைகள் மறையாது
கேளுங்கள் கொடுக்கப்படும் என்றாய்
தேடுங்கள் காணப்படும் என்றாய்
தட்டுங்கள் திறக்கப்படும் என்றாய்
ஏசுவே இனிய ஏசுவே
ஏசுவே இனிய ஏசுவே

பாடல் :

பாலன் உனைப் போற்றிடுவோம் - போற்றி
பாடல் பல பாடிடுவோம் (பாலன் உனை)

திருத்தந்தை ஆயர்கள் குருமார்கள் துறவியர்
எல்லோர்க்கும் அருள்புரிக
வருத்தத்தை சுமப்போர்கள் பிணியுற்று நலிந்தோர்கள்
நலம்பெற அருள்புரிக
திக்கற்றோர், குழந்தைகள், சுற்றத்தார், தாய்மார்கள்
பக்கத்தில் நின்றிடுக
பக்தர்களின் விண்ணப்பம் பரிவுடன் கேட்டருள்க
அப்பத்தை ஏற்றிடுக (பாலன் உனை)

மணநாளில் தண்ணீரை கனிச்சாறாய் மாற்றிய
குணவானே வாழ்த்திடுக
உழைப்பாலே உருவான திராட்சை ரசம் இதனைப்
பருகியே வாழ்த்திடுக

திருச்சபை விளங்கிடவும் ஜெபங்கள் பலித்திடவும்
திருப்பலி ஏற்றிடுக
விருப்புடன் ஆண்டவரின் வலப்புறம் அமர்ந்தவனே
வேண்டுதல் கேட்டிடுக

எங்கள் காணிக்கை ஏற்றிடுக
எங்களையே காணிக்கையை ஏற்றிடுக!

வசனம் :

பரமபிதாவே!
விரும்பு வெறுப்புகளிலும், வெற்றி தோல்விகளும்
இன்ப துன்பங்களிலும்
அவரைப் போல் நாங்கள் வாழ்ந்திட அருள்புரியும்
குழந்தை ஏசுவாம் எங்கள் மீட்பரின் பெயராலே
வேண்டுகிறோம்.

ஆமென்.

28. வாக்குத்தத்தம்

எந்த நேரத்தில் எதைச் சொல்ல வேண்டும் என்று
எதிர் பார்த் திருக்கின்றார் - நம்
நெஞ்சின் ஆழத்தில் மெல்லிய ஒலியால்
வாக்குத் தத்தம் அளிக்கின்றார்
சந்தேகம் இன்றி அது தேவனின் பேச்சே
நம்பிக்கை வைத்திடுவாய்
துன்பத்தின் நடுவே கரைசேர்த் திடவரும்
தோணியைப் பற்றிடுவாய்

கர்த்தரை நினைத்திடுவாய் - அவரை
நித்தமும் ஜபித்திடுவாய் (எந்த நேரத்தில்)

சத்ருக்கள் நடுவே சாந்த சொரூபியாய்
ஏசு நிற்கின்றார்
சண்டையை நீக்கி சமாதானம் செய்து
அன்பை வளர்க்கின்றார்
நித்திரை நடுவிலும் நிச்சயமாக
உற்றுப் பார்க்கின்றார்
நேசம் கொண்டவர் தாகம் தீர்ந்திட
பாலை வார்க்கின்றார்

கர்த்தரை நினைத்திடுவாய் - அவரை
நித்தமும் ஜபித்திடுவாய் (எந்த நேரத்தில்)

தாங்கச் சங்கிலிக் கண்ணிகள் போலே
ஆசிகள் தொடர்ந்து வரும் - ஒரு
சந்தன மல்லிக் கொடியைப் போலே
அன்பு படர்ந்து வரும்

பூரண சற்குண நாயகன் யேசுவின்
பார்வை புதுவெள்ளம்
யாரையும் அணைக்கும் ஆதர வளிக்கும்
கள்ளமில்லா உள்ளம்

கர்த்தரை நினைத்திடுவாய் - அவரை
நித்தமும் ஜெபித்திடுவாய் (எந்த நேரத்தில்)

29. நன்றி நவிலல்

அன்றாடம் அற்புதங்கள் அரங்கேறும் மேடை
ஆடிவரும் தென்றலுடன் பாடிவரும் ஓடை
சென்றால் பெறுவதுவோ தித்திக்கும் திராட்சை
தேடியது கிடைத்தபின்னே வேறென்ன ஆசை

குழந்தை ஏசுவிற்கு நன்றி சொல்வோம்
குறை தீர்த்து வைத்தவர்க்கு நன்றி சொல்வோம்
(அன்றாடம்)

அங்கேயும் இங்கேயும் அசைந்தாடும் ஊஞ்சல்
அப்படித்தான் வாழ்க்கையதும் ஆற்றினிலே நீஞ்சல்
இன்பமும் துன்பமதும் இருவிழிகள் போலே
இருகையும் அசைந்தால்தான் கரைசேரலாகும்.

அவனிடம் ஒப்படைத்தால் ஆகாததேது
குழந்தை ஏசு புகழ் தினந்தோறும் பாடு
(அன்றாடம்)

சென்ற உயிர் மீண்டதடா செய்து வைத்தார் ஏசு
நொந்தவர்கள் மகிழ்ந்தார்கள் அன்பு வைத்தார் ஏசு
கதி என்று சரணடைந்தால் காப்பதவர் பொறுப்பு
அநுபவித்துப் பார்த்த பின்பு அவரிடம் தான் விருப்பு

நவமணி ஜெபம் செய்தால் நல்லதுவே நடக்கும்
குழந்தை ஏசுவிடம் கேட்டதெல்லாம் கிடைக்கும்
(அன்றாடம்)

30. விஸ்வாஸம் தேவனே

விருப்பம் என்னது பொறுப்பு உன்னது
விஸ்வாஸம் தேவா
கருத்து உன்னது கடமை என்னது
அடைக்கலம் தேவா (விருப்பம்)

படிப்படி யாக நடத்திச் செல்வதுன்
அடிப்படைச் சட்டம்
பதட்டம் எதற்கு விளக்கம் செய்வது
இறைவனின் திட்டம் (விருப்பம்)

எப்போதும் ஜபம் தப்பாது நிதம்
துக்கம் இல்லை எனக்கு
முற்றிலு மாகவே ஒப்படைத் தேனே
கிறிஸ்துவை யே நினைத்து

எந்தப் பருவத்தில் எதைத் தருவது
என்பதை நீ அறிவாய்
துன்பத்தும் இன்பத்தும் துணை யாய்வந்து நீ
நன்மைகளே புரிவாய் (விருப்பம்)

31. ஞான போதகர்

இழந்த பொருளுக்காக வருந்தாமல் நான்
என்னை உனக்குத் தந்தேன் - என்றும்
இருக்கும் பொருள் இனியும்
இருக்கப் போகும் பொருள் நீ
என்பதை அறிந்து கொண்டேன்
இயேசு நாயகரே - என்
ஞான போதகரே (இழந்த)

நெற்றியில் குனிந்து நீ முத்தம் இட்ட அந்த
நிகழ்ச்சியை மறப்பேனா
நெஞ்சினில் பொங்கிய ரத்தத்தைக் காட்டிய
அன்பினைத் துறப்பேனா
ஞாயிறும், திங்களும் எல்லா நாளும் நின்
ஆலயம் காண்கின்றேன்
வாழ்விலும், தாழ்விலும் நீ உடன் வருவதை
நன்றாய் உணர்கின்றேன்
இயேசு நாயகரே - என்
ஞான போதகரே (இழந்த)

நீயே எந்தன் பரம எஜமான் - உன்
மௌனமும் பேச்சாகும்
மேய்ப்பனின் கண்கள் ஆட்டின்மேல் இருக்கும் - நின்
ஆட்சியே மூச்சாகும்
கடக்க முடியாத நதியொன்றில்லை - ஒரு
படகினை அனுப்பி வைப்பாய்
கண்ணுக்குத் தெரியாத மலர்களைக் கனிகளை
கொடியினில் தோற்றுவிப்பாய்
இயேசு நாயகரே - என்
ஞான போதகரே (இழந்த)

32. திராட்சைத் தோட்டம்

ஒரு
வனாந்தரத்தில் திராட்சைத் தோட்டம்
வாட விடலாமோ
வற்றாத கருணை ஊற்றாய்ப் பொங்கிட
வாழ்த்த வரலாமோ
யேசு ஸ்வாமியே - எங்கள் யேசு - ஸ்வாமியே
பேசு ஸ்வாமியே - வந்து - பேசு ஸ்வாமியே
(ஒரு வனாந்தரத்தில்)

அக்கினிக் காற்று எங்களின் நெஞ்சை
அனலில் வாட்டிடுதே - உன்
அன்பின் ஸ்வாஸம் அதன்மேல் படட்டும்
துன்பம் போக்கிடுமே
தாயைப் போன்ற தயவே உன்னால்
ஆனாத தெது ஐயா
வானம் நோக்கி வாடும் நிலத்தில்
மழையைப் பொழிவாயே
யேசு ஸ்வாமியே - எங்கள் யேசு - ஸ்வாமியே
பேசு ஸ்வாமியே - வந்து - பேசு ஸ்வாமியே
(ஒரு வனாந்தரத்தில்)

பயப்படாதே உன்னோ டிருக்கிறேன்
என்பதுன் பார்வையன்றோ
படகைத் தண்ணீர் விழுங்கி விடாமல்
பாதுகாக்க வருவாய்
புயலைத் துரத்தி அமைதியைத் தருவாய்

தென்றல் வீசிடுவாய்
புன்னகை யாலே நன்மைகள் உண்டு
புதுவழி காட்டிடுவாய்
யேசு ஸ்வாமியே - எங்கள் யேசு - ஸ்வாமியே
பேசு ஸ்வாமியே - கண்ணால் - பேசு ஸ்வாமியே
(ஒரு வனாந்தரத்தில்)

நீ நிகழ்த்திய அற்புதம் ஆயிரம்
பேசி முடியாது
வான வீதியின் தேவ தூதனை
யாருக்குத் தெரியாது
போருக்கு மத்தியில் அமைதிப் புறாவே
புறப்பட்டு நீ வருவாய்
நேரினில் கண்டால் நிம்மதி பிறக்கும்
சற்றே மனம் வைப்பாய்
யேசு ஸ்வாமியே - எங்கள் யேசு - ஸ்வாமியே
பேசு ஸ்வாமியே - கண்ணால் - பேசு ஸ்வாமியே
(ஒரு வனாந்தரத்தில்)

33. ஜீவிய பாக்கியம்

ஏசு பிரானின் சாம்ராஜ் யத்தில்
எந்தக் குறையும் இல்லை
இடம்புறம் வலப்புறம் எந்தப் புறத்திலும்
தடைகள் எதுவும் இல்லை
வாசற் கதவுகள் திறந்தே இருப்பது
தேவனின் அரண்மனையே
வந்து இளைப்பாற நந்தவனம் பல
வாஎன அழைத்திடுதே (ஏசு பிரானின்)

தீர்க்க தரிசியின் வைத்திய சாலையில்
நோய்கள் தீர்ந்திடுதே
ஜபம் செய்பவர் இல்லத்தில் எல்லாம்
தீபம் தெரிந்திடுதே
ஆடுகள் எல்லாம் மேய்ப்பவ னிடத்தில்
அடைக்கலம் ஆகிடுதே
பாடுகள் யாவும் பலன்கள் பெற்றே
பரிசுத்தம் சேர்ந்திடுதே (ஏசு பிரானின்)

ரட்சகர்அவரின் சமையற் கூடத்தில்
உணவுக்குப் பஞ்சம் உண்டோ
கர்த்தர் கஜானா பொங்கி வழிகையில்
கவலைகள் ஏதும் உண்டோ
நித்தமும் அவரின் காலடி ஓசைகள்
நெஞ்சின் சங்கீதமே
எப்பொழுதும் அவர் பக்கத்தில் இருப்பது
ஜீவிய பாக்கியமே (ஏசு பிரானின்)

34. என்னையும் நேசிப்பார்

வானில் என் தந்தை மிக சந்தோஷமே
அவர் தந்த நூலதும் அன்பின் சின்னம்
நான் காணும் பைபிள் அதி அற்புதம்
ஏசுவின் நேசந்தான் மிக இனியதே

ஏசுவின் நேசத்தால் சந்தோஷமே
எத்தகு நேசம் எத்தனை பாசம்
என்னையும் நேசித்தார் ஏசு கிறிஸ்து
சந்தோஷம் சந்தோஷமே (வானில் என்)

நானவரை மறந்தெங்கோ திரிந்தாலுமே
அவரன்பு அங்கங்கு தொடர்ந்தே வரும்
ஏழைமேல் ஏசுவின் நேசம் கண்டே
அவர் கையில் மீண்டும் நான் சரணடைவேன்

ஏசுவின் நேசத்தால் சந்தோஷமே
எத்தகு நேசம் எத்தனை பாசம்
என்னையும் நேசித்தார் ஏசு கிறிஸ்து
சந்தோஷம் சந்தோஷமே (வானில் என்)

ஒருபாட்டு மட்டுந்தான் பாடு என்றால்
மகராஜன் அவரழகைப் பாடுவேன் நான்
என்றென்றும் என் பாட்டு ஒலித்திடுமே
எப்போதும் அவரன்பு அற்புதமே

ஏசுவின் நேசத்தால் சந்தோஷமே
எத்தகு நேசம் எத்தனை பாசம்
என்னையும் நேசித்தார் ஏசு கிறிஸ்து
சந்தோஷம் சந்தோஷமே (வானில் என்)

35. அழைப்பு

கருணைக் கர்த்தர் அழைக்கிறார்
பாவ மகனே வா
பாச அழைப்பு நேச அழைப்பு
வா உடனே வா
அமைதி வாக்கு அருளும் கிறிஸ்து அன்பு பொங்குது
இனிய மொழி கேளு முழுமை அன்பது
பாச அழைப்பு நேச அழைப்பு பாவம் நீங்கவா (கருணை)

வாராயோ என்று பொறுமை யாகவே காத்திருக்கிறார்
சுமையை இறக்கி என்னில் ஒய்வு கொள் என்றுரைக்கிறார்
அன்பு ததும்பும் வாழ்வு மலரும் ஆனந்தம் பொழியும்
இனிய மொழி கேளு முழுமை அன்பது
பாச அழைப்பு நேச அழைப்பு பாவம் நீங்கவா (கருணை)

பாவம் நோயில் களைத்த ஆன்மா அழைப்பை மறுக்குமோ
தேடி வந்த அன்பை அருளே வெறுத்து ஒதுக்குமோ
காலம் பறந்து ஓடும் உயிரின் ஒளியும் மங்குமே
இனிய மொழி கேளு முழுமை அன்பது
பாச அழைப்பு நேச அழைப்பு பாவம் நீங்கவா (கருணை)

36. போர் வீரன்

நான்ஒரு போர் வீரன் அஞ்சா நெஞ்சினன்
ராஜன் கட்டளைக்குக் காத்திருக்கிறேன்
முன்னேறிச் செல்லச் சொல்லும் தலைவனின் பக்கம்
உண்மையான ஊழிய னாய்க் காத்திருக்கிறேன்

போர்க்கள ஒலிகள் கேட்டிடுதே போஎனும் ஆணை
போலிகள் கீழே வீழ்வர் விரைந் தோடுவதைப் பார்
எளியேன் நான் போர்வீரன் தான் என்றாலும்
தளபதி என்னைத் தானே நம்பி இருக்கிறார் (நான் ஒரு)

நான் ஒரு போர் வீரன் களத்தில் இருக்கிறேன்
தொப்பி கத்தி கேடயம் தாங்கி நிற்கிறேன்
போர் முழக்கம் முரசுச் சத்தம் இதோ நான் உள்ளேன்
தலைவனுக்குப் பதில் கூறவே தயாராய் உள்ளேன்

போர்க்கள ஒலிகள் கேட்டிடுதே போஎனும் ஆணை
போலிகள் கீழே வீழ்வர் விரைந் தோடுவதைப் பார்
எளியேன் நான் போர்வீரன் தான் என்றாலும்
தளபதி என்னைத் தானே நம்பி இருக்கிறார் (நான் ஒரு)

நான் ஒரு போர் வீரன் எனக்கும் பங்குண்டு
மணிமுடி சூடும் நாளில் நிலைத்த புகழுண்டு
உண்மையான வீரன் என்றால் விருது பல உண்டு
என்னையும் பாராட்ட வருவோர் பலர் உண்டு

போர்க்கள ஒலிகள் கேட்டிடுதே போஎனும் ஆணை
போலிகள் கீழே வீழ்வர் விரைந் தோடுவதைப் பார்
எளியேன் நான் போர்வீரன் தான் என்றாலும்
தளபதி என்னைத் தானே நம்பி இருக்கிறார் (நான் ஒரு)

37. சொர்க்க வாழ்வு

கனி ரசம் விளை நிலம்
அனைத்துமே என் வசம்
ஒளி தரும் மகிழ்ச்சி நாள்
இரவு முடிந்ததே

கனிரசம் விளைநிலம் அனைத்துமே என் வசம்
ஒளி தரும் மகிழ்ச்சி நாள் இருளும் அகன்றதே

ஓ ஜெரூசலேம் என் ஜெரூசலோம்
உன் மலைமுடி அதில் நிற்கிறேன்

அதோ கடற்கரை அதன் வெளியிலே
எனக் கெனப்பல இனிய மாளிகை
புதுச் சுடர் ஒளி அதைப் பார்க்கிறேன்
சுகம் தரும் இடம் இனி என் இல்லம்

என்னுடன் ஏசுவும் அவரை நான் தொடர்கிறேன்
உறவிது இனியது எதிரில் சொர்க்கமே

வான மேடையில் தேவ மாதர்கள்
ஆடல் காண்கிறேன் பாடல் கேட்கிறேன்

இளந் தென்றலில் வரும் நறுமணம்
பசுஞ் சோலைகள் இனிய தேன்மலர்
உயிர் நாதமாம் நதியின் கீதம்
நிரந் தரசுகம் புதுநிலை தரும் (கனி ரசம்)

38. ஏசு என் காவலர்

ஏசு என் காவலர் வாழ்க அவர் பேர்
பெத்லஹேம் நகரிலே அவர் பிறந்தார்
ஏழையின் தொழுவத்தில் அவர் பிறந்தார்
தேவன் வருகை நலமே
எனக் காகவே வந்தார் அவர்
என்னைத் தேடியே வந்தார் அவர்
ஆம் அது அதிசயம் அவர் பேர் வாழ்க
வாழ்க ஏசு வாழ்க (ஏசு என் காவலர்)

கர்த்தர் என் காவலர் பயிர் வளர்த்தார்
கல்வாரி சிலுவையில் உயிர் கொடுத்தார்
மாபெரும் செயலது யாரால் இயலும்
எனக்காகத் தான் அவர் மரித்தார்
நமக்காகத் தான் அவர் மரித்தார்
நாம் வாழத்தர்ன அவர் மரித்தார்
மாபெரும் செயலது யாரால் முடியும்
மரணத்தை முத்தம் இட்டார் (ஏசு என் காவலர்)

ஏசு என் காவலர் வருவார் மீண்டும்
இனியதோர் சத்திய வாக்கு அது
காலம் கடந்தாலும் காண்பேனே நான்
காணத் தான் போகின்றேன் நிச்சயமாய்
விண்ணில் ரதம் தேவன் அதோ
கண்ணாலே நான் கண்டிடுவேன்
வருவார் என் ஏசு வானின் வழி
உறுதியாய்க் காண்பேனே நான் (ஏசு என் காவலர்)

39. சொர்க்க பூமி

அந்த இனிய சொர்க்கம் அதனை எண்ணி
மனது மகிழுதே
நல்ல அழகு மாதர் வெள்ளை உடையிலே
ஆடல் பாடலே
பிரிவு என்ப தில்லை பிரிவு என்ப தில்லை
பிரிவு என்ப தில்லை..... ஆ...... ஆ...... (அந்த இனிய)

பல பழைய நண்பர் பயமே இன்றி கூடி வாழ்கிறார்
ஒரு உழைப்பு இல்லை களைப்பு இல்லை என்றும் மகிழ்கிறார்
பிரிவு என்பதில்லை பிரிவு என்பதில்லை
பிரிவு என்பதில்லை.... ஆ..... ஆ...... (அந்த இனிய)

எனைக் காத்து ரட்சிக்கும் கர்த்தர் அங்கு ஆட்சி நடத்துவார்
ஒரு கவலை இன்றி வெற்றிப்பாடல் முரசு முழங்குவார்
பிரிவு என்ப தில்லை பிரிவு என்ப தில்லை
பிரிவு என்ப தில்லை..... ஆ...... ஆ...... (அந்த இனிய)

எனைக் காக்கும் மேய்ப்பர் இனிதாய் அங்கு ஆட்சி நடத்துவார்
ஒரு கவலை இல்லை தோல்வி இல்லை முரசு முழங்கும்
பிரிவு என்பதில்லை பிரிவு என்பதில்லை
பிரிவு என்பதில்லை.... ஆ..... ஆ...... (அந்த இனிய)

40. விலையிலா ஒளி

ஏசு நாமம் எடுத்துப்போ உடன்
துயர் பகை வாட்டும் குழந்தையே
அது தான் இன்ப சுகம் தந்திடும்
எடுத்துப்போ எங்குப் போயினும்

விலையிலா.........சுவையது
நம் பலம்......... அந்த விண்ணின் நலம்

(ஏசு நாமம்)

ஏசு நாமம் ஏந்திப் போ என்றும்
எதிரியைத் தடுக்கும் கேடயம்
ஆசைகள் மோதும் போது சொல்லுவாய்
ஏசுவே என்னும் மந்திரம்

விலையிலா.........சுவையது
நம் பலம்......... அந்த விண்ணின் நலம்

(ஏசு நாமம்)

ஏசு நாமம சொல்லுவாய் உந்தன்
உயிரிலே கலந்த அதிசயம்
கைகளால் தழுவ வரும் போதிலே
காணங்கள் நாவில் தவழ்ந்திடும்

விலையிலா.........சுவையது
நம் பலம்......... அந்த விண்ணின் நலம்

(ஏசு நாமம்)

41. முழு நிறைவானவர்

ஓ ஏசு நாதா உம்மில் என்னை
கண்டு கொண்டேன் நான்
எங்கும் காணா அமைதி இன்பம் ஆனந்தம்
தருவது நீரே பெறுவது நானே
அழியா சுகம் நீரே (ஓ ஏசுநாதா)

மனச் சாந்தி மகிழ்ச்சி தேடிக் களைத்தேன்
உம்மை எண்ணவில்லை
ஆம் நீயோ என் வழி தானே வந்து
கருணை மழை பொழிந்தீர்
பேரன்பும் வாழ்வும் உம்மிடமே
அழியாச் சுகம் நீரே

உன்பேர் மட்டுமே உரைத்திடுவேன்
என்றும் எந்தன் முழு நிறைவே (ஓ ஏசுநாதா)

ஓர் உடைந்த ஜாடியில் வழிந்த நீரைத் துடைத்தேன்
தாகம் தணியு முன்னே
அது மறைந்த வெறும் கதையாய் நான் வாழ்ந்து விட்டேன்
உன் அருள் பெற்றேன்

அருள் விழிப் பார்வை பெற்றேன்
பேரன்பும் வாழ்வும் உம்மிடமே
அழியாச் சுகம் நீரே
உம் பேர் மட்டுமே உரைத்திடுவேன்
என்றும் எந்தன் முழு நிறைவே (ஓ ஏசுநாதா)

42. வெறுங்கையோடு போவதா?

ஒரு நாளாவது பணிபுரியாமல்
பரிசு ஏதும் தாராமலே
வெறுங்கையோடு போவதா என்
ஏசு ரட்சகரைப் பார்க்கவே

வெறுங்கையோடு போவதா என்
கர்த்தர் தன்னைக் காணவே
புகழ் பாடாத ஆன்மாவாக
வெறுங்கை யோடு போவதா (ஒரு நாளாவது)

சாவைக் கண்டு கலக்கம் இல்லை
ஏசு என்னைக் காக்கிறார்
வெறுங் கையோடு அவரைக் காண
புருவம் நெளியும் ஏக்கமே

வெறுங்கையோடு போவதா என்
கர்த்தர் தன்னைக் காணவே
புகழ் பாடாத ஆன்மாவாக
வெறுங்கை யோடு போவதா (ஒரு நாளாவது)

பாவம் செய்து கழிந்த பொழுது
மீண்டும் எண்ணிப் பயனென்ன
ஏசு என்னை மன்னிக்கக் கூடும்
அவரின் இரக்கம் வணங்கினேன்
வெறுங்கையோடு போவதா என்

கர்த்தர் அவரைக் காணவே.
புகழ் பாடாத ஆன்மாவாக
வெறுங்கை யோடு போவதா (ஒரு நாளாவது)

43. சிலுவையின் அருகில்

சிலுவை அருகில் நிறுத்திடு
புனித அருவி அங்கு தான்
நோயைத் தீர்க்கும் ஓடையும்
கல்வாரி மலையில் தவழுதே

சிலுவையில் சிலுவையில்
என்றும் என் புகழ் வாழ்கவே
நதியைத் தாண்டி ஓய்வினை
நலிந்த ஆவி பெறும் வரை (சிலுவை)

சிலுவை அருகில் நடுங்குவேன்
அன்பும் அருளும் அணைத்திடும்
புலரும் காலை விடிவெள்ளி
நம்பிக் கையின் சுடரொளி

சிலுவையில் சிலுவையில்
என்றும் என் புகழ் வாழ்கவே
நதியைத் தாண்டி ஓய்வினை
நலிந்த ஆவி பெறும் வரை (சிலுவை)

சிலுவை அருகில் கடவுளின்
ஆட்டுக் குட்டி மேயுமே
நாளும் நானும் நடந்திட
தேவன் கிருபை வேண்டுமே

சிலுவையில் சிலுவையில்
என்றும் என் புகழ் வாழ்கவே
நதியைத் தாண்டி ஓய்வினை
நலிந்த ஆவி பெறும் வரை (சிலுவை)

44. துள்ளும் சந்தோஷம்

தேவன் வரும் நேரம் ஆஹா
வானம் மலர் தூவிடுதே
பாலன் வரும் காலம் ஆஹா
ஜோதி சுடர் தோன்றிடுதே
ஏசுவின் தாயடே மாமரியே
மாசில்லாத குணவதியே
என்றும் எங்கள் நெஞ்சில் தங்கும்
அன்பின் திரு உருவே (தேவன் வரும் நேரம்)

பாராளும் ராஜன் வந்தான்
பரலோகம் இங்கே தான்
சீராளன் செல்வன் வந்தான்
மாறாத இன்பம் தான்
மாட்டுத் தொழுவத்திலே / மன்னன் அவன் பிறந்தான்
வாட்டும் குளிரினிலே / மாதா மடிதவழ்ந்தான்
காரிருள் நீங்க கதிரவன் உதித்தான்
கர்த்தன் கை அசைத்தான் (தேவன் வரும் நேரம்)

பாவங்கள்போக்க வந்தான் பாடங்கள் சொல்லித்தான்
பண்பாடு காக்க வந்தான் அன்போடு நெருங்கித்தான்
மடமையை வென்றிடவே / புது யுகம் கண்டிடவே
சிலுவையைச் சுமந்திடவே / த்யாகம் செய்திடவே
வள்ளல் வந்ததும் அல்லல் அகன்றது
துள்ளும் சந்தோஷம் (தேவன் வரும் நேரம்)

45. தாலாட்டு

கண்ணே பொன்னே கனிரசமே தேனே
விண்ணே மின்னே விடிகாலைப் பனியே
தாலாட்டுப் பாட்டொன்று பாடட்டுமா
பூப்போலப் பொன்னூஞ்சல் ஆட்டட்டுமா (கண்ணே)

நேசனைப் பற்றி அணைக்கட்டுமா
பாசத்தைக் கொட்டி அளக்கட்டுமா
ஏசுவே அள்ளி எடுக்கட்டுமா
ராஜாவே முத்தம் கொடுக்கட்டுமா
நீதானே எங்கள் குலக் கொழுந்து
தேனாகத் தித்திக்கும் சுவை விருந்து
வாராயோ மடிமீது கண்ணுறங்கு
வற்றாத செல்வமே கண்ணுறங்கு

ஆணிப்பொன் முத்தாரம் மாணிக்க மணியாரம்
காணக் கண் போதாது கண்ணுறங்கு (கண்ணே)

கண்ணுக்குள் என்ன சித்திரமோ
எண்ணத்தில் என்ன விசித்திரமோ
வண்ணத்துப் பறவை இமை மூடு
வானத்துத் தேவாஎன் சொல் கேளு
போதும் உன் தீரா விளையாட்டு
வா எந்தன் தோளில் தலை சாய்த்து
ஓய்வாகச் சற்றே கண்ணுறங்கு
ஒய்யாரச் சிட்டே கண்ணுறங்கு

நீ வந்த காரணம் யாவும் நிறை வேறும்
பாரெல்லாம் போற்றிடும் கண்ணுறங்கு

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கர!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி
(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)
19. ஞாலம் போற்றிய ஞானியர்
20. மாதாவே! மரியே...!
21. மாசிலா ஏசு
22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)
23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)
24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)
25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)
26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)
27. காதல்! காதல்!
28. என் இரு விழிகள்
29. எண்ணிப் பார்க்கிறேன்
30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)
31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)
32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)
33. பாத மலர்கள்
34. இசை மாலை
35. சாரல்
36. பொங்க புனல்
37. கங்குள் வெள்ளம்
38. இன்பத் தீ
39. செக்கர் வானம்
40. அன்னையடா அன்னை
41. வளரும் பயிர்
42. பொன்மாரி மொழிகள்
43. மலேசிய திருத்தலங்கள்



இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.

நெய்தல்
பதிப்பகம்